# மாவட்ட நீதிமன்றம், நாகப்பட்டினம்

## அசல் வழக்கு எண். 28–2023

**நாள்:** 18.02.2026

**பெயர் : கோபாலகிருஷ்ணன்**

**PW: 1**

**<u>குறுக்கு விசாரணை</u>**

குருசாமிபிள்ளை 10.08.1966ல் உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 4/2000 என்ற வழக்கில் உயிலை பற்றிய விபரங்கள் விவாதிக்கப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. அசல் வழக்கு எண் 4/2000 மாவட்ட நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யபட்டது அதனை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் 10.06.2003ல் தள்ளுபடி செய்யப்பட்டது. 4/2000ல் உயில் ஆவணம் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. கூடுதல் முதன்மை வாக்குமூலத்தில் குருசாமிபிள்ளை புனிதவதி அம்மாளுக்கு எழுதி கொடுத்த உயில் பத்திரம் முறையாக எந்த நீதிமன்றத்திலும் ஏற்கொள்ளபடவில்லை என்று நான் கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். அவ்விபரத்தை என் வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால் கூறியிருக்கிறேன். அவ்வாறு எந்தவொரு கட்சியும் என் வழக்குரையில் நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.